**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

CC.No. 116/2021

| | | |
|---|---|---|
| Deposition of Witness for PW | : | 4 |
| Name (திரு/திருமதி) | : | செல்வகுமார் |
| Father's Name/ Husband's Name | : | ராஜாராமன் |
| Village & Taluk | : | விவசாயம் |
| Calling | : | மொடையூர் |
| Age | : | 31 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 25.07.2025**

**(எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317 மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1. இந்த வழக்கு விபத்தில் இறந்துபோன எல்லப்பன் என்பவரை எனக்கு தெரியும். கடந்த 2020 ம் வருடம் ஒரு நாள் மாலை சுமார் 05.00 மணியளவில் மொடையூரில் இருந்து நாட்டார்மங்கலத்திற்கு இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தேன். அப்போது நான் மொடையுரில் உள்ள செல்லியம்மன் கோவிலிடம் நான் சென்றபோது அங்கு கரும்பு லோடு லாரி மற்றும் இருச்சக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டிருந்தது. நான் அங்கு சென்று பார்த்தபோது லாரி டிரைவர் அங்கில்லை. எல்லப்பன் என்பவர் இறந்திருந்தார். காவலர்கள் அங்கு இறந்த நபரின் விவரங்களை குறித்து விசாரித்துக்கொண்டிரூந்தனர். இறந்த நபர் என் உறவினருக்கு பக்கத்து ஊரைச்சேர்ந்தவர் என்பதால் நான் அவரின் விவரத்தை கூறிறேன். மேற்படி இருசக்கர வாகனம் மற்றும் லாரி ஆகியவற்றின் பதிவு என் தற்போது நினைவில் இல்லை. காவலர்கள் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் சம்பவ இடத்திடம் வருவதற்கு முன்னரே விபத்து நடைபெற்றிருந்தது என்றால் சரிதான். நான் விபத்தை கண்ணுறவில்லை என்றால் சரிதான். விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் துரை என்பவரும் இருந்தார். காவலர்கள் என்னை இவ்வழக்கு தொடர்பாக விசாரிக்கவில்லை.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.